வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம்
சிறுவாக்கம் ஊராட்சி

மனைப்பிரிவு

மாவட்டம் : காஞ்சிபுரம்
வட்டம் : காஞ்சிபுரம்
உள்ளாட்சி : சிறுவாக்கம்
கிராமம் : சிறுவாக்கம்
நில அளவை எண்கள் : 573/1A,575/1A1A2,1A1B,1A2, 1B,3A1,3A2,3B,4A,4B,5,6,7A, 575/7B1,7B2 ,சிறுவாக்கம் கிராமம்-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்க்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்
அளவு = 1 : 800(1"=66')
கோப்பு எண் : 4386/ 2015 செம3

குறிப்பு:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பு = 9.04 ஏக்கர் (393782.4 ச.அடி)
கோரிய மனைகள் = 170
ஒதுக்கிய மனைகள் = 182 (111 முதல் 170 வரை EWS மனைகள் ஆகும்)

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டிய பகுதி

பூங்கா - 39969.5 ச.அடி (10.15%)

விற்பனைக்குரிய பகுதி:

EWS மனைகள் - 37488.07 ச.அடி (12.90%)
கடை- I - 1684.0 ச.அடி
கடை- II - 1667.0 ச.அடி
கடை- III - 2205.0 ச.அடி
5556.0 ச.அடி (1.41%)

மனைப்பிரிவு இடத்தின் எல்லை
நிலையில் உள்ள சாலை
உத்தேச மனைப்பிரிவு சாலை

கட்டிட வரம்பு : 7.0மீ அகல சாலைகளுக்கு - 1.5மீ
கட்டிட வரம்பு : 9.0மீ மற்றும் 12மீ அகல சாலைகளுக்கு - 3.0மீ

மூலைமுடக்கு : 9.0மீ மற்றும் 7.0மீ அகல சாலைகளுக்கு - 1.5மீ x 1.5மீ
மூலைமுடக்கு : 12.0மீ அகல சாலைகளுக்கு - 3.0மீ x 3.0மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண்:71, ஊரக வளர்ச்சி துறை நாள்16.6.2003 ன் படி சாலைகள் பூங்கா மற்றும் மூலை முடக்கு ஆகிய நிலப்பரப்பினை மனுதாரர் தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்த பின்னரே இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் நில ஆர்ஜிதம் செய்துத் தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் தலைவர் உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.

3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்ப்படின், மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பு இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதலிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.

5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொது மக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6'X4' என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
6. EWS மனைகள் பொருளாதாராத்தில் பின் தங்கியவர்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும். இம்மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

சிறப்பு நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் முலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி, திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப்பத்திரம், மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் முலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

மவ/ந.ஊ.து.இ(செம)எண் : 04/2017

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு)
செங்கல்பட்டு மண்டலம்
செங்கல்பட்டு

தனி அலுவலர்,
சிறுவாக்கம் ஊராட்சி,
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.ப),
வாலாஜாபாத் ஒன்றியம்.

5/6/18 5.6.18

வரைவாளர் நிலை -III

உதவி இயக்குநர் 8/12/17